செ.வெ.எண்: 05 நாள்:04.06.2020

# பத்திரிக்கைச் செய்தி

## அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மின்கட்டமைப்பு சாராத தனித்தியங்கும் சூரிய சக்தி பம்பு செட்டுகள் 70 சதவிகித மானியத்தில் அமைத்துக் கொடுக்கும் திட்டம்

அரியலூர் மாவட்டத்தில் 2020 –2021நிதி ஆண்டில் திறந்த வெளி கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்புகள் அமைப்பதற்கு 70% அரசு மானியத்தில் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் வழங்கப்படவுள்ளது.

மத்திய அரசின் பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான எரிசக்தி பாதுகாப்பு மற்றும் வாழ்வதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் (PM - KUSUM) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயப் பயன்பாட்டிற்கான திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் சூரிய சக்தியில் இயங்கும் பம்ப்செட்களை 70 சதவீத மானியத்தில் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. நடப்பு 2020-21ம் ஆண்டில் அரியலூர் மாவட்டத்திற்கு 410 சோலார் பம்ப்செட்கள் அமைப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு 5 முதல் 10 குதிரைதிறன் வரையிலான AC மற்றும் DC மோட்டார் பம்பு செட்கள் அமைத்துத் தரப்படும். 5 HpACமற்றும் 5 HpDCசூரிய சக்தியால் இயங்கும் நீர் மூழ்கி மோட்டார் பம்பு செட்கள் அமைப்பதற்கான மொத்த விலை முறையே ரூ.2,37,947/-மற்றும் ரூ.2,42,303/-ஆகும்.இதில் விவசாயிகளின் 30%பங்களிப்பு முறையே ரூ.71,384/-மற்றும் ரூ.72,691/-ஆகும்.

7.5HpACமற்றும் 7.5 HpDC சூரிய சக்தியால் இயங்கும் நீர் மூழ்கி மோட்டார் பம்பு செட்கள் அமைப்பதற்கான மொத்த விலை முறையே ரூ.3,16,899/-மற்றும் ரூ.3,49,569/-ஆகும். இதில் விவசாயிகளின் 30%பங்களிப்பு முறையே ரூ.97,070/-மற்றும் ரூ.1,04,871/-ஆகும்.

10HpACமற்றும் 10HpDCசூரிய சக்தியால் இயங்கும் நீர் மூழ்கி மோட்டார் பம்பு செட்கள் அமைப்பதற்கான மொத்த விலை முறையே ரூ.4,37,669/- மற்றும் ரூ.4,39,629/- ஆகும். இதில் விவசாயிகளின் 30%பங்களிப்பு முறையே ரூ.1,31,301/-மற்றும் ரூ.1,31,889/-ஆகும்.

ஏற்கனவே, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ள விவசாயிகள் அவர்களுடைய மூதுரிமையை துறக்க வேண்டிய அவசியம் இல்லை. தங்களுக்குரிய இலவச மின் இணைப்பு முறை வரும்பொழுது சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான சம்மத கடிதத்தினை சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தில் வழங்க வேண்டும். இதுவரை இலவச மின் இணைப்பு வேண்டி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் விண்ணப்பிக்காத விவசாயிகள் புதிதாக பதிய வேண்டிய அவசியமில்லை. சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை அமைத்திட விண்ணப்பிக்கும் போது நுண்ணீர் பாசன அமைப்புடன் இணைத்திட உறுதிமொழி அளித்திட வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள விவசாயிகள் வேளாண்மைப்பொறியியல் துறை, உதவி செயற்பொறியாளர்(வே.பொ) அரியலூர் மற்றும் உதவி செயற்பொறியாளர்(வே.பொ) ஜெயங்கொண்டம் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**